ந.க.எண் :23 நாள்: 09.08.2017

## கரூர் மாவட்டத்தில்

## குறுஅங்கன்வாடிபணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் காலிப் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க கரூர் மாவட்ட ஆட்சியர் தகவல்.

கரூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் பணியிடம் காலியாக உள்ள 232 குறு அங்கன்வாடி பணியாளர்கள் 246 அங்கன்வாடி உதவியாளர்கள் பணியிடங்களுக்கு இன சுழற்சி முறையில் நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்ய தமிழக அரசு உத்திரவிட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு. கோவிந்தராஜ், இ.ஆ.ப. அவர்கள் விடுத்துள்ள செய்தி குறிப்பில் - காலியாக உள்ள குறுஅங்கன்வாடிபணியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. குறு அங்கன்வாடி பணியாளர்களாக தேர்வு செய்யப்படுபவர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ. 1800 -3300 தரஊதியம் ரூ.300, என்ற ஊதிய விகிதத்துடன் ஊதியம் வழங்கப்படும்.

இரு பதவிகளுக்கும் பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவார். குறுஅங்கன்வாடி பணியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்க 01.07.2017 அன்று 25 வயது பூர்த்தியடைந்தவராகவும், 35 வயதிற்கு மிகாதவர்களாகவும் இருக்க வேண்டும். விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர் அதிக பட்ச வயது 40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். கல்வித் தகுதி 10 - ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அங்கன்வாடி உதவியாளர் பணிக்கு விண்ணப்பிப்பவர்கள் 20 வயது நிரம்பியவராகவும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். எழுத படிக்க தெரிந்தவராகவும் இருக்க வேண்டும். விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்கள் 45 வயது வரை விண்ணப்பிக்கலாம்.

மாற்றுத்திறனாளி பெண்களும் குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். இவர்களுக்கு 4 % இடஒதுக்கீடு வழங்கப்படும். குறு அங்கன்வாடி பணியாளர் பணிக்கு விண்ணப்பிப்பவர் 25 வயது பூர்த்தியடைந்தவராகவும், 38 வயதுக்கு மிகாமலும் உள்ளவராக இருக்க வேண்டும். விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்கள் 43 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்கும் மாற்றுத்திறனாளிகள் 20 வயது பூர்த்தியடைந்தவராகவும், 43 வயதுக்கு மிகாமலும் இருக்கவேண்டும். விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்கள் 43 வயதுக்கு மிகாமல் இருக்கவேண்டும். அங்கன்வாடி மையத்தில் பயிலும் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளை கையாளும் திறன் உள்ள கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் தகுதியானவர்கள்.

இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் அதே கிராமத்தை சார்ந்தவராக இருக்கவேண்டும். தகுதியான நபர் அதே கிராமத்தில் இல்லையெனில் அதே கிராம பஞ்சாயத்தை சார்ந்த அருகில் உள்ள கிராமத்தை சேர்ந்தவர் தேர்ந்தெடுக்கப்படுவார். குறிப்பிட்ட பஞ்சாயத்தில் தகுதியான நபர் கிடைக்கப்பெறாவிடில் 10 கி.மீ தொலைவிற்கு உட்பட்ட அருகில் உள்ள பஞ்சாயத்தை சேர்ந்தவர் தேர்தெடுக்கப்படுவார். நகர்புறங்களில் அதே வட்டம் (வார்டு) சேர்ந்தவராக இருக்கவேண்டும். தகுதியான நபர் அந்த வட்டத்தில் (வார்டு) இல்லாவிடில் அருகில் உள்ள வட்டத்தில் (வார்டு) உள்ளவராக இருக்க வேண்டும். அதிலும் தகுதியானவர் இல்லாதபட்சத்தில் அதே நகராட்சி / பேரூராட்சினை சேர்ந்தவராக இருக்கவேண்டும்.

விண்ணப்பதாரர்கள் வசிப்பிட ஆதாரமாக வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, வீட்டு வரி இரசீது, குடும்ப அட்டை, இவற்றில் ஏதேனும் ஒரு சான்று நகல் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும். அத்துடன் சான்றொப்பம் இடப்பட்ட கல்வி மாற்று சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ், சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், ஆகியவை இணைக்கப்படவேண்டும். விதவை, கணவரால் கைவிடப்பட்டவர், மற்றும் மாற்றுத்திறனாளிகள் எனில், அதற்கான சான்றினை இணைக்கப்படவேண்டும்.

இப்பணிக்கான விண்ணப்பங்கள் இணைய தளத்தில்-www.icds. tn.nic. in AWW – AWH – Appointment criteria என்ற பகுதியின் இறுதியில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம், மேலும் விண்ணப்ப படிவம், காலிப்பணியிட விவரம் மற்றும் இனசுழற்சி குறித்த விவரங்களை சம்மந்தப்பட்ட குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களை அணுகி தெரிந்து கொள்ளலாம். உரிய விண்ணப்பபடிவத்தில் பணிகோரும் இடத்தினை குறிப்பிட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 22.08.2017 ஆம் தேதி மாலை 5.00 மணிக்குள் சம்மந்தப்பட்ட குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் கிடைக்கப்பெறுமாறு அனுப்பப்படவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. 13.08.2017 ஞாயிற்றுக்கிழமை 15.08.2017 (அரசு விடுமுறை ) மற்றும் 20.08.2017 ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும். கூடுதல் விவரங்களுக்கு அந்தந்த வட்டாரத்தில் உள்ள குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட திட்ட அலுவலர் என்ற முகவரியில் அணுகலாம்.

**வெளியீடு– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**